# நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது முதல்வர் உரை...! முதல் பக்கத் தொடர்ச்சி

எங்களைப் பொருத்தவரையிலும், விவாதங்களில் விருப்பு, வெறுப்பின்றி நாகரிகமாக வாதங்களை வைக்க வேண்டும்என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள். 23.3.2017 அன்று அன்றைக்கு இந்த அவையில் நான் பேசியதை எண்ணிப் பார்க்கிறேன்.

**நினைத்துப் பார்த்தாலே நெஞ்சம் சுடும் பேச்சு!**

எத்தனை விதிமீறல்கள், மரபுகளிலிருந்து விலகல்கள், என்னுடைய உரையில் அன்றைக்குச் சுட்டிக்காட்டியுள்ளேன். நினைத்துப் பார்த்தாலே நெஞ்சம் சுடுகிறது. அதனை அனைவரும் படித்துப் பார்க்க வேண்டும்.

அதுமாதிரியா இன்றைக்கு நடக்கிறது? என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் அன்றைக்கு உள்ளபடியே வேதனைப்பட்டேன். அந்த வேதனையின் வெளிப்பாடாகத்தான் அது மீண்டும் தொடரக் கூடாது என்று முடிவெடுத்தேன்.

இந்த அவையில் அதுமாதிரி நிகழ்வுகள், விதிமீறல், ஜனநாயகத்தை புறந்துள்ளும் மரபு மீறல்கள், எதுவும் நிகழக்கூடாது என்பதில் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் நான் காட்டிய உறுதி, அப்பாவு அவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்கச் செய்தது.

அவர்களும் முழுமையாக அதனை உணர்ந்து, பேரவைத் தலைவராக தன்னுடைய பணியை மிகச்சிறப்பாக செய்து வருகிறார். அனைவரையும் ஒரே கண்ணோட்டத்தோடு பார்த்து செயலாற்றுகிறார்.

இந்தத் தீர்மானம் மு.அப்பாவு அவர்களின்மீது சில அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்டுள்ளது. இதையொட்டி அவர்கள் வைத்த வாதங்களில் உண்மைக்கு மாறான செய்திகள் உள்ள காரணத்தால், அதனை மறுத்து, விளக்கத்தை எடுத்து வைத்து - பேரவைத் தலைவரின் நடுநிலையை பறைசாற்ற வேண்டிய கடப்பாடு, கடமை, பொறுப்பு முதலமைச்சருக்கும் உள்ளது, இங்கே உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் உள்ளது.

அவைக்கு ஒவ்வாத வார்த்தைகளாக அன்றைக்குப் பயன்படுத்தப்பட்ட பல சொற்கள், ‘அருகதை’, ‘தகுதி’, ‘என்ன யோக்கியதை இருக்கிறது’ என்று தி.மு.க. உறுப்பினர்களைப் பார்த்து அன்றைக்குப் பேசப்பட்ட அந்த வார்த்தைகள், இன்றைக்கு அவையில் பேசப்படுமானால், உடனே பேரவைத் தலைவரால் அந்த வார்த்தைகள் நீக்கப்பெற்றுள்ளன.

அன்றைக்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசினால் அவைக்குறிப்பில் இடம் பெறும். தி.மு.க. உறுப்பினர்கள் பேசினால் நீக்கப்படும் என்ற நிலை. இன்றைக்கு பேரவைத் தலைவர் அவர்கள் அப்படியா நடக்கிறார்? இல்லை.

**அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு அதிக வாய்ப்பு!**

நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேசுகிற இதுபோன்ற ஒன்றிரண்டு வார்த்தைகளைக் கூட விட்டுவிடுகிறார். ஆளுங்கட்சி உறுப்பினர்களிடம் கண்டிப்பாக நடந்துகொள்கிறார் என அமைச்சர்கள், உறுப்பினர்கள் சொல்லும்போது, அதைக் கேட்டு உள்ளபடியே எனது மனம் மகிழ்ச்சி அடைந்தது.

ஏனென்றால், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத்தான் அதிக வாய்ப்புகள் தர வேண்டும், அவர்கள் இந்த அரசின் செயல்பாட்டினை செம்மைப்படுத்துபவர்களாக உள்ளவர்கள் என்பதில் தலைவர் கலைஞர் அவர்களின் வழி நடக்கும் திராவிட மாடல் அரசுக்கு அந்த எண்ணம் உண்டு.

பல நேரங்களில் கடந்த காலங்களில் நான் பெற்ற கசப்பான உணர்வு என் நினைவிற்கு வரும். இங்கே, அ.தி.மு.க. உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தால், தொடர்ந்து குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்தால் அவர்களை அமைதிப்படுத்தி, அமர வைக்கத்தான் பேரவைத் தலைவர் முயல்வாரே தவிர முந்தைய பேரவைகளில் நாங்கள் வெளியேற்றம் செய்யப்பட்டதைப் போல, என்றும் வெளியேற்றம் செய்ய பேரவைத் தலைவர் நினைத்ததில்லை.

கூட்டணியில் உள்ள எங்கள் கட்சி உறுப்பினர்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதங்களில் பங்குபெற, முன்பு அளிக்கப்பட்டதுபோல தனியே வாய்ப்பு அளிக்காமல், எங்கள் கணக்கிலேயே பேரவைத் தலைவர் சேர்த்துவிடுகிறார்.

கேட்டால், உதயசூரியன் சின்னத்தில் நின்று வென்றவர்கள் என்ற காரணத்தால் என்பார். அது மாதிரியா முன்னர் நடந்தது? ஒன்றிரண்டு விஷயங்களை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கடந்த 10.1.2025 அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றினார்கள். 1.40 மணிக்குத் தொடங்கி 4.32 மணிக்குத் தான் முடித்தார். 2 மணி நேரம் 52 நிமிடம் பேசியுள்ளார். அமைச்சர்களின் குறுக்கீடுகள் 1 மணி நேரம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மட்டும் பேசியது 1 மணிநேரம் 51 நிமிடம்.

இங்கே எதிர்க்கட்சிகள், குறிப்பாக அதிமுக உறுப்பினர்கள் உரையாற்றுகையில் அமைச்சர்கள் விளக்கம் அளிக்க எழுந்தால், உரையை முடித்த பிறகு விளக்கம் அளிக்கலாம் என அமர வைத்துள்ளார்.

அதேநேரத்தில், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட முன்வரிசைத் தலைவர்கள் எழுந்தால் உடன் அனுமதி அளித்திடுவார். நான் குறையாகச் சொல்லவில்லை, பெருமையாகவே சொல்கிறேன். அமைச்சர்கள் குறுக்கீடும் உறுப்பினர்கள் கணக்கில் ஏற்கெனவே கடந்த காலத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் உறுப்பினர் பேசுகிற நேரத்தை மட்டும் கணக்கிட்டு, இங்கே உள்ள ஸ்கீரினிலேயே காண்பிக்கிறார்கள்.

**சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் பேரவை!**

அனைத்து வகைகளிலும் எங்களைலாக் செய்கிறார் என எங்கள் கட்சி உறுப்பினர்கள் சொன்னாலும் - சுதந்திரக் காற்றை இந்தப்பேரவை தற்போது சுவாசிக்கிற காரணத்தால், பேரவைத் தலைவர் செயல்பாட்டினை எண்ணி மகிழ்ச்சியுற்றுள்ளேன்.

பேரவைத் தலைவராக மட்டுமல்ல, பேரவை கடைப்பிடிக்க வேண்டிய பண்பாட்டின் தலைவராக அப்பாவு அவர்கள் செயல்பட்டுள்ளார் என்றே குறிப்பிட விரும்புகிறேன்.

பல நாட்களில். அ.தி.மு.க. உறுப்பினர்களை பேச அனுமதித்துவிட்டு, தி.மு.க. உறுப்பினர்கள் பேச பெயர் பட்டியலில் இடம் பெற்றும், இன்னொரு நாள் பேசலாம் என்றும் சொல்லி இருக்கிறார்.

பேரவைத் தலைவர் அவர்களின் செயல்பாடுகளை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிப்படையாக பாராட்ட முடியா விட்டாலும், மனதிற்குள் பாராட்டிக் கொண்டு தான் இருப்பார்கள்.

இந்த அரசின் மீது குற்றம் குறை கூற வாய்ப்பில்லாத காரணத்தால் இப்படி ஒரு தீர்மானமா உள்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பத்தால் அதை திசை திருப்ப இப்படி ஒரு தீர்மானமா என்ற விவாதத்தை வெளியில் உள்ளவர்கள் நடத்தட்டும். நாம் நடத்த வேண்டாம்.

ஆனால் இப்படி ஒருவர் மீது இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்தோமே என்று எதிர்காலத்தில் உங்கள் மனச்சாட்சி உறுத்தும். பேரவைத் தலைவர் அவர்கள் மீது எய்தப்பட்ட அம்பாகவே கருதுகிறோம். இந்த அம்பை இந்த அவை ஏற்காது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

“ரூ” என்ற எழுத்தை வைத்தே ஒட்டுமொத்த

# பா.ஜ.க.வை அலற விட்டிருக்கிறார் முதல்வர்!




கிடைக்கிற கேப்புல எல்லாம் ஆப்பு வக்கிறியே சிவாஜி. விவேக் ரஜினியை பார்த்து கேட்கும் அந்த டயலாக்தான் இன்றைய சங்கிகளுக்கு தலைவர் கொடுத்த இந்த காலணி அடியை பார்த்தவுடன் மைண்ட்ல வந்து நின்னுச்சி.!

இந்தியை திணிப்பதை நிப்பாட்டு, நிப்பாட்டுன்னு சொல்லிட்டே இருக்கோம். கேட்க மாட்டியா.?!

நீ திணிச்சி வச்சிருக்குற இந்தியை நீக்கிட்டு அதுல எங்க தமிழை திணிக்கிறேன் பார்... இந்தியா முழுக்க அலறட்டும்... இனி இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் தாய்மொழிப்பற்று உள்ளோர் எல்லாம், அவரவர் தாய் மொழியிலேயே இந்திய ரூபாயை அடையாளப்படுத்தும் நிலை ஏற்படும் பார். என்று தலைவர் தளபதியார் ஒன்றிய ஆட்சியாளர்களின் தூக்கத்தை கலைத்துப் போட்டிருக்கின்றார்.!

இது. இது. இதுதான் புரட்சி.!

புரட்சித் தலைவர், இரும்புப் பெண்மணி என்று பேர் வச்சிக்கிட்டா பத்தாது..!

ஆளுகின்ற ஒன்றிய அரசின் சர்வாதிகார ஆணவத்தை அடக்க உள்நாட்டில் புரட்சியை தூண்ட வேண்டும். அந்த ஒன்றிய அரசின் அரச பயங்கரவாதத்திற்கு பயப்படாமல் இரும்புத் தலைவனாக உயர்ந்து நிற்க வேண்டும்.!

**சௌமியன் வைத்தியநாதன்**
கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்



இதைக் கண்டு ஒன்றிய அரசு என்ன செய்து விடும்.?! இதோ உடனே டாஸ்மாக்கில் ஆயிரம் கோடி ஊழல் என்று அவர்களின் கிளைக்கழகமான ஈடியை வைத்து கோயபல்ஸ் வேலையை துவங்கிவிட்டது.!

இப்படியெல்லாம் தான் ஒன்றிய ஃபாஸிஸ அரசு செய்யும் என்பதை புரிந்தவராகத்தான். “மரணம் நான் கேட்ட தாலாட்டு” என்று நேற்றே தலைவர் தளபதியார் அறைகூவல் விடுத்து விட்டார்.! எங்கள் தாய் தமிழ்நாட்டிற்கு. கல்விக்காக நியாயமாக வர வேண்டிய இரண்டாயிரத்தி நானூறு கோடி ரூபாய் நிதியை, நாங்கள் இந்தியை ஏற்கவில்லை என்ற காரணத்திற்காக தராமல் நிறுத்தி விட்டீர்கள். அதை அப்படியே மத்திய பிரதேசத்திற்கும், குஜராத்திற்கும் மடை மாற்றி விட்டீர்கள்.

சொல்லப்போனால், இது தான் மிகப் பெரிய்ய ஊழல்..! தமிழ்நாட்டு குழந்தைகளின் உரிமையான 2400 கோடி ரூபாயை சப்பைக் காரணம் காட்டி அபகரித்து விட்டீர்கள்.! இது தான் ஊழல்.!

தலைவர் தளபதியார் உங்களை அலற வைக்க. பக்கம் பக்கமாக எழுதவில்லை. மணிக்கணக்கில் பேசவில்லை. ஒரே ஒரு வார்த்தை கூட அல்ல.

ஒரே ஒரு எழுத்து. “ரூ” அதை வைத்தே ஒட்டுமொத்த சங்கிகளையும் கதற விட்டிருக்கின்றார்.!

இப்பொழுது நீங்கள் சொல்லியிருப்பதோ, ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் என்று. ஆனால் நீங்கள் கிளப்பிவிட்ட ஒரு லட்சத்தி எழுபத்தைந்தாயிரம் கோடி ரூபாய் டுபாக்கூர் ஊழல் பரப்புரைகளை எல்லாம் நாங்கள் பார்த்திருக்கின்றோம்.

அதைச் சொல்லிச் சொல்லியே நீங்கள் ஆட்சிக்கும் வந்தீர்கள். ஆனால் உங்கள் ஆட்சிக் காலத்தில் தான் அதில் அண்ணன் ஆ. ராசா அவர்கள் ஊழலே செய்யவில்லை என்று விடுதலை பெற்று தகத்தகாய சூரியனாய் வெளியே வந்தார்.

காரணம். உங்களுக்கும் முன்கூட்டியே தெரியும், அது ஜோடிக்கப்பட்ட பொய் வழக்கு என்று. ஆனால் உங்கள் கோயபல்ஸ் பிரச்சாரத்தை வைத்து மக்களை மூளைச்சலவை செய்து ஆட்சியைப் பிடித்து விட்டீர்கள். வழக்கு நீதிமன்றத்தில் தோற்றுப் போனது. ஆனாலும் 11 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கும் நீங்கள் இதுவரை அதற்காக முழு வலிமையுடன் மேல் முறையீட்டுக்கு செல்லவே இல்லை. காரணம் அது பொய் வழக்கு என்று உங்களுக்கு தெரியும்..!

இப்பொழுதோ அதே பாணியில் ஆயிரம் கோடி உருட்டு ஒன்றை கொண்டு வந்துள்ளீர்கள். இது போல இன்னும் சிலபல உருட்டுக்களை அடுத்து தேர்தல்வரை நீங்கள் உருட்டலாம்..!

ஆனால் உங்கள் உருட்டுக்கள்... இனிமேல் தமிழ் நாட்டில் விலை போகாது..!

எங்கள் தலைவர் தளபதியாரின் வியூகங்களும், மக்கள் நல திட்டங்களும்...மக்களோடு மக்களாக... மக்களுக்காகவே அவர் நிற்பதும்.... மீண்டும் உங்களை நோட்டாவிற்கு கீழே கொண்டு செல்லும். எழுதி வைத்துக்கொள்ளுங்கள்..!

---



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில், வட்ட ச்செயலாளர் இ. கண்ணப்பன் முன்னிலையில் 16வது வட்டம் சடையங்குப்பம் பகுதியில் முதலமைச்சர், அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கி, கழக அரசின் சாதனைகளை விளக்கி துண்டு பிரசுரங்கள் மூலம் திண்ணை பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், கே.சிவசங்கரன், நா.மோகன்குமார், பா.சந்திரன், பி.தரணி, எஸ்.கருணாகரன், எச். பீர்முகமது, இ.அருள், வக்கீல் இ. வெங்கடேசன், பரசுராமன், சி.முத்தையா, வி.மாரி, எம்.என், அஜய் தென்னவன், வக்கீல் சுரேந்தர், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

முத்தமிழறிஞர் கலைஞருக்கு

# புதுவையில் மரியாதை அளிக்கும் வகையில் பெயர் சூட்டப்படும்!

## சட்டப்பேரவையில் முதல்வர் ரங்கசாமி அறிவிப்பு!

*புதுச்சேரி, மார்ச் 18-*

புதுவை சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது நடந்த விவாதம் வருமாறு:

**கென்னடி (தி.மு.க.):** அரசு வாக்குறுதி அளித்தபடி மறைந்த தமிழக முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்க அரசு சார்பில் ஏதேனும் குழு அமைக்கப்பட்டுள்ளதா? இடம் தேர்வு செய்யப்பட்டதா? இல்லையெனில் ஏன்?

**அமைச்சர் திருமுருகன்:** எந்த குழுவும் இதுவரை அரசால் அமைக்கப்படவில்லை.

**கென்னடி:** புதுவை தனி மாநிலமாக உருவாக குரல் கொடுத்தவர் எங்கள் தலைவர். அவருக்கு சிலை அமைக்க ஏன் காலதாமதம்? கிழக்கு கடற்கரை சாலையில் வரும் புதிய பஸ்நிலையத்துக்கு வாஜ்பாய் பெயர் சூட்டப்படும் என அறிவித்துள்ளீர்கள். மனசாட்சியோடு செயல்படுங்கள்.

**எதிர்கட்சித்தலைவர் சிவா:** எந்த குழுவும் அமைக்கப்படவில்லை என கூறலாமா? இது தவறான தகவல். இடம்கூட தேர்வு செய்தோம்.

**நேரு (சுயே):** மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் புதுவையில் சிலை அமைக்க வேண்டும்.

**எதிர்க்கட்சித் தலைவர் சிவா:** யாருடைய சிலையை வைக்கவும், நாங்கள் எதிராக இல்லை. சிலை வைப்பது தொடர்பாக 5 முறை பதில் கூறிவிட்டீர்கள். ஆனால் சிலை அமைக்கவில்லை. இதில் பெருந்தன்மையோடு நடந்துகொள்ளுங்கள்.

**முதலமைச்சர் ரங்கசாமி:** சிலை வைக்கக்கூடாது என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. தமிழுக்காகவும், தமிழர்களுக்காகவும் பாடுபட்ட, போற்றப்படும் தலைவர்களுக்கு சிலை அமைப்பதில் மாற்று கருத்தும் இல்லை. ஆனால் சுப்ரீம்கோர்ட் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனால் மறைந்த தமிழக முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு மரியாதையும், மதிப்பும் அளிக்கும் வகையில் ஏதாவது ஒரு இடத்திற்கு பெயர் சூட்டப்படும் என்றார். இவ்வாறு விவாதம் நடந்தது.

---

200 வீடுகளுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டு இந்த ஆண்டிலேயே

# பல்லாவரம் - குன்றத்தூர் நான்கு வழிச் சாலைப் பணியை முடித்திட வேண்டும்!

## சட்டப்பேரவையில் - இ.கருணாநிதி வலியுறுத்தல்!

*சென்னை, மார்ச்.18-*

சட்டப்பேரவையில் பல்லாவரம் தொகுதி உறுப்பினர் இ.கருணாநிதி வைத்த கோரிக்கையும் அதற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு :-





பகுதி அமைப்பாளர் வழக்கறிஞர் செ.விவேக்செல்வம் ஏற்பாட்டில் கழக தலைவர் முதல்வர் 72வது பிறந்தநாளை முன்னிட்டு சைதை மேற்கு பகுதி – விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாபெரும் கிரிக்கெட், வெட்ரான் கால்பந்து போட்டி நடைபெற்றது அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடக்கி வைத்தார் பரிசுகளை வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., வழங்கினார்

**இ.கருணாநிதி:** பல்லாவரம் சட்டமன்றத்தொகுதியில் எட்டு இலட்சம் மக்கள் தொகை கொண்ட ஒரு மிகப்பெரிய தொகுதி. ஆக, அந்தப்பகுதியில் பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர், குன்றத்தூர் சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றவேண்டும் என்று கடந்த சட்டப்பேரவையில் நான் தெரிவித்தேன், அமைச்சர் அவர்களும் அதற்கு அனுமதியும் வழங்கியிருக்கிறார்கள்.

அந்த இடத்திலே சுமார் 14 வீடுகளுக்கு நஷ்டஈடும் வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள சுமார் 86 வீடுகள் மற்றும் சுமார் 200 வீடுகளுக்குத்தான் அந்த நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும். அந்தத் தொகையை வழங்கப்பட்டுவிட்டால், இந்த ஆண்டிலேயே, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த இரு வழிச் சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றப்படுமா?

**அமைச்சர் எ.வ.வேலு:** நம்முடைய இ.கருணாநிதி அவர்கள் சொல்வது உண்மை தான். ஏனென்றால், பல்லாவரம் பகுதியிலே இருந்து குன்றத்தூர் சாலையை இணைத்து விட்டோம் என்று சொன்னால், நமக்கு தாம்பரம் பகுதியிலே வருகிற crowd கூட குறைந்து விடும். அதனால், அரசின் சார்பாக அதற்கு வேண்டிய முயற்சிகளை நாங்கள் தொடர்ந்து எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் என்ன ஒரு பிரச்சினை என்று சொன்னால், பல்லாவரம் என்பது வியாபாரிகள், வர்த்தகர்கள் அதிகமாக இருக்கிற பகுதி என்கிற காரணத்தினால் அந்த சாலையிலே கட்டுமானம் அதிகமாக இருக்கிறது. அதற்கான விலைகள் என்று பார்க்கிறபோது, கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. அதனால்தான் கொஞ்சம் காலதாமதமாகிறது. முதலமைச்சர் அவர்களும் அறிவார். அந்த பல்லாவரம் திட்டத்தை பற்றி அதிகம் அறிந்தவர் முதலமைச்சர் அவர்கள். அதனால் மீண்டும் அவரிடத்திலே வலியுறுத்தி நிதித் துறைமூலம் தேவையான அளவிற்குப் பணத்தை ஒதுக்கி, அந்த நிலம் எடுப்பு பணி முடித்து விட்டோம் என்று சொன்னால், அந்தச் சாலைப் போடப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் வே. ஆல்பன்
### மார்ச் 18 (1999)



**கன்னியாகுமரி மாவட்டக் கழகச் செயலாளராக ஏழு ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**திருவட்டாறு ஒன்றியத் தலைவராகவும் பின்னர் திருவட்டாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**நெருக்கடிநிலையின்போது மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**“இனிய இயல்பினர், எவரிடத்தும் பண்புடன் பழகக்கூடிய மனப்பக்குவமுடையவர்” எனத் தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**